
உ

சிவமயம்

# நினைவு மலர்




காரைநகர்/யாழ்ப்பாணம்/பரந்தன்/கொலண்ட் இல்
வசித்து, லண்டனில் வாழும்
K.S. வேலாயுதம் அவர்களின்
வாழ்க்கைத் துணைவியான

## திருமதி. வேலாயுதம் யோகேஸ்வரி

அவர்களின் நினைவுமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்




தாய்க்குத் தாயுமாய்,
தந்தையுமாய் தன் கடமைகளை
இறக்கும் வரையிலும் செய்து
முடித்து தம் செல்வங்கள்,
உறவினர்கள், உடன்
பிறப்புக்கள் மகிழ்வுடன் வாழ
வழி சமைத்து சிட்டென பறந்த
எம் ஒளி விளக்கிற்கு
கண்ணீரைக் காணிக்கையாக்கி
அவரை வணங்குகிறோம்.

கணவன், சகோதரங்கள்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்





தோற்றம்
யாழ்ப்பாணம்

11 . 03 . 1951



மறைவு
இலண்டன்

03 . 10 . 2012





## அமரர். உயர் திருமதி.

# யோகேஸ்வரி வேலாயுதம்

### *திதி வெண்பா*

சீரோங்கு நந்தன வருட புரட்டாதி பதினெட்டில்
தேரேங்கு தேய்பிறை சதுர்த்தி திதியில் (3.10.2012)
பேர்பூத்த தையலவர் யோகேஸ்வரி
பார் போற்ற நல்வாழ்வு வாழ்ந்து இறைவன் கழலடைந்தார் ஏத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் காப்பு



## விநாயகர் வணக்கம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக்கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

## தேவாரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிகனெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியை
அம்பலங் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயை
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட
பாற் கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின்னும் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெரு வாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி துதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல் வாளென் உள்ளத்தினுள்ளே
இருப்ப ளிங்கு வாரா திடர்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தி லரசரோ டென்னைச்
சரியாசனம் வைத்த தாய்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற்கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமுந் துதித்தாற்
கல்லும் சொல்லாதோ கவி

# சகலகலாவல்லி மாலை

வெண்டாமரைக் கன்றிநின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைத்க்குத் தகாதுகொலோ சகமேழு மளித்
துண்டானுறங்க வொழித் தான்பித் தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய் பங்கயா சனத்திற்
கூடும் பசும்பொற் கொடியேகனதனக் குன்றுமைப்பாற்
காடும் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுதார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாபமயிலே சகல கலாவல்லியே

தூக்கும் பனுவற்றுரை தோய்ந்தகல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும் தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலாவல்லியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகலகலா வல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பாலமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப்பேடே சகல கலாவல்லியே

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகல கலாவல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம் பல கோடியுண்டேனும் விளம்பிலுன் போல்
கண்கண்ட தெய்வமுளதோ சகல கலாவல்லியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

*உடற்கூற்றுவண்ணம்*

தனதன தானா தனதன தானா
தந்ததனந்தன தந்ததனந்த
தனனதனந்த தனனதனந்த
தானன தானன தானன தந்த -
தந்ததனதான தனதானனா

ஒருமடமாது மொருவனுமாகி யின்பசுகந்தரு
மன்புபொருந்தி யுணர்வுகலங்க யொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து -

பனியிலொர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்துபு
குந்துதிரண்டு பதுமவரும்பு கமடமிதென்று
பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற -

உருவமுமாகி யுயிர்வளர்மாத மொன்பதுமொன்று
நிறைந்துமடந்தை யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும்வாரமு நாளுமறிந்து -

ஒளிநகையூற லிதழ்மடவாரு முவந்துமுகந்திட
வந்துதவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
வாவிருபோவென நாமம்விளம்ப -

உடைமணியாடை யரைவடமாட வுண்பவர்தின்பவர்
தங்களொடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடிநடந்து -
அஞ்சுவயதாகி விளையாடியே

உயர்தருஞான குருவுபதேச முந்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலரும்விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும்வந்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிர்முடிகோதி யறுபதநீல வண்டிமிர் தண்டொடை
கொண்டைபுனைந்து மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க

மதனசொரூப னிவனெனமோக மங்கையர்கண்டும
ருண்டுதிரண்டு வரிவிழிகொண்டு கழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு -

மனதுபொறாம லவர்பிறகோடி மங்கலசெங்கல
சந்திகழ்கொங்கை மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி -

ஒருமுதலாகி முதுபொருளாயி ருந்ததனங்களும்
வம்பிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து -

வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதமடைந்து -
செங்கையினிலோர்த டியுமாகியே.

வருவதுபோவ தொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து மதியுமிழந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல்வி டாமன்மொழிந்து -

துயில்வருநேர மிருமல்பொறாது தொண்டையுநெஞ்சுமு
லர்ந்துவறண்டு துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர்பாலர்கள் கோரணிகொண்டு -

கலியுகமீதி லிவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்ச கலகலவென்று மலசலம்வந்து
கால்வழிமேல்வழி சாரநடந்து -

தெளிவுமிராம லுரைதடுமாறி சிந்தையுநெஞ்சமு
லைந்துமருண்டு திடமுமுலைந்து மகவுமலைந்து
தேறிநலாதர வேதெனநொந்து -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறையவன்வேத னெழுதியவாறு வந்ததுகண்டமு
மென்றுதெளிந்து இனியெனகண்ட மினியெனதொந்த
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற

கடன்முறைபேசு மெனவுரைநாவு றங்கிவிழுந்துகை
கொண்டுமொழிந்து கடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமுநின்று
நெஞ்சுதடுமாறி வருநேரமே

வளர்பிறைபோல வெயிறுமுரோம முஞ்சடையுஞ்சிறு
குஞ்சியும்விஞ்ச மனதுமிருண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள் வந்து

வலைகொடுவீசி யுயிர்கொடுபோக மைந்தரும்வந்துகு
னிந்தழநொந்து மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து -

பழையவர்காணு மெனுமயலார்கள் பஞ்சுபறந்திட
நின்றவர்பந்த ரிடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியுமென்று -

பலரையுமேவி முதியவர்தாமி ருந்தகவசங்கமு
வுஞ்சிலரென்று பணிதுகில்தொங்கல் களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்பை -

வரிசைகெடாம லெடுமெனவோடி வந்திளமைந்தர்கு
னிந்துசுமந்து கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து -

விறகிடமூடி யழல்கொடுபோட வெந்துவிழுந்துமு
றிந்துநிணங்க ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை -
நம்புமடியேனை யினியாருளுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்

# பொருள்

அறியாமைக் குணமுடைய ஒரு தலைவியும் ஒரு தலைவனுந் தன்னந்தனியராய், இன்பசுகத்தை யளிக்கும் அன்பில் நிலைத்து, அறிவு மயங்க, (தலைவன் வழியாக) வெளிவந்த சுக்கிலம் (தலைவி வழியாக) வெளிவந்த சுரோணிதத்திற் கலந்து

(சுக்கிலமுஞ் சுரோணிதமுங் கலந்து) பனித்துளியில் ஒரு பாதியளவான சிறுதுளி தலைவியின் கருவிற் பாய்ந்து திரண்டு தாமரை மொட்டினையும் ஆமையினையும் போன்று கண் உடல் வாய் காது கால் கைகள் என்று சொல்லப்பட்ட

வடிவம் பெற்று உயிர் வளர்வதற்குப் பத்து மாதம் பூர்த்தியாகி அத்தலையின் வயிற்றினின்றும் வெளி வந்து பூமியில் விழ; (உறவினர்) யோகம் வாரம் நாள் (முதலியவற்றை ஆராய்ந்து) அறிந்து.

பிரகாசிக்கின்ற பற்களோடு ஊறுதலையுடைய உதடுகளைப் பெண்கள் விரும்பி முத்தமிட அவர்களிடந் தவழ்ந்து சென்று மடியிலிருந்த குதலைச் சொற்களைப் பேசி வா உட்காரு போ என்று அதிசய வார்த்தைகளை யுரைக்க

உடுக்கையாகிய இரத்தினாபரணங்களும் அரைஞாணும் அசையும்படி உண்பவர்களோடுந் தின்பவர் களோடும் உடனிருந்து உண்டு, வீதியிற்சென்று உட்கார்ந்து புழுதியை வாரிப் பூசிக்கொண்டு, தன்னை நாடிவந்த குழந்தைகளுடன் ஓடியும் நடந்தும் விளையாடி ஐந்து வயதையடைந்து,

மேன்மை யளிக்கும் ஞானாசாரியனது உபதேசம் பெற்றுத் தமிழ் நூல்களை யோதி அவைகளின் எல்லையைக் கண்டு, பலரும் வளர்பிறை யென்று சொல்லுமாறு வளர்ந்து சிறந்த பதினாறு வயது அடைந்து,

தலைமயிரை வகிர்ந்து கட்டி ஆறு கால்களையுடைய நீல வண்டுகள் ஒலிக்கின்ற குளிர்ந்த பூமாலையாற் கொண்டையை அலங்கரித்து, இரத்தினங்களாலும் பொன்னாலும் செய்யப்பட்டுப் பிரகாசிக்கின்ற ஆபரணங்களைத் தரித்து, இருந்து புகழ்வோரும் நின்று புகழ்வோரும் ஒருங்கு சேர்ந்து வணங்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமக்கிழத்தியர்கள் (இவனைப்) பார்த்து " இவன் காமனைப் போன்ற வடிவினன்" என்று (எண்ணி) மயங்கி ஒன்றுகூடிச் செவ்வரி படர்ந்த தங்கள் கண்களால் சுழற்றி மருட்டி அழகிய மயிலைப் போல அவர்கள் செல்வதைக் கண்ணுற்று,

மனந்தளராமல் அவர்களைப் பின் தொடர்ந்து சென்று அழகிய செம்பொற் கலசம் போன்றொளிருந் தனங்கள் தன் மார்பிற் பொருந்தப் புணர்ந்து அதரபானஞ்செய்து, சம்பாதித்த பெருஞ் செல்வப் பொருளை முழுவதும் அவர்களுக்குக் கொடுத்து.

மூலதன மொழிந்து மற்றுமுள்ள உரிமைப் பொருள்களாகிய செல்வங்களையும் தீய வழியில் செலவழித்துக் காமவின்பத்தின் துக்க மி:.தென்று சொல்லும்படி இளமைப் பருவ அழகு மாறுபட்டு,

அழகும் மாறுபட்டு, இளமையும் மாறுபட்டு, வலிய பற்கள் விழுந்து, இரண்டு கண்களின் ஒளி குன்றி, வயது மூப்படைந்து, நரை திரை அடர்ந்து, நிலைகெட்டு மாறி வேறுபட்டுச் சிவந்து, கையில் ஒரு தடி பிடித்து,

இங்குமங்கும் உலவுதலையுடைய ஒரு கிழக்கூன் குரங்கு என்று சொல்லும்படி குந்தியும் நடந்தும் அறிவு கெட்டு, காது செவிடடைந்து, ஓயாமல் சொல்வது இன்னதென் றறியாமல் வாயில் வந்தவாறு பிதற்றி,

தூக்கம் வரும் வேளையில் உண்டாகும் இருமலைப் பொறுக்க முடியாமல் தொண்டையும் மார்பும் உலர்ந்து வறட்சியடைந்து, கட்டிய ஆடையும் நழுவிச் சுரணை கெட்டு, (அந்நிலையைக் கண்ணுற்ற) மனைவியரும் மக்களும் மனக்குழப்பங்கொள்ள,

கலியுகத்தில் இவர் நீதியைப் பாருங்கள் என்று சொல்பவர்கட்குக் கவலை அதிகரிக்கச் சலசலவென்று மலசலமிழந்து கால்வழியாகவும் மேல்வழியாகவும் பொருந்த வொழுகி,

உள்ளத் தெளிவுமன்றி, வாய் குளறி, எண்ணமும் மனமுங் குலைந்து மயங்கி உறுதி கெட்டு மிகவுந் தடுமாறி ஆராய்ந்து சிறந்த துணை (நமக்கு இதுகாலை) ஏது என்று வருந்தி,

வேதநாயகனாகிய நான்முகன் தலையில் எழுதியபடியே கண்டமும் வந்துவிட்டது என்று தெளிவடைந்து "இனியென்ன கண்டமிருக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியென்ன தொந்தமிருக்கிறது, இனி உலகவாழ்வு நிலையாக விராது, எஞ்சி நின்ற,"

"கடமை முறைகளைப் பேசுங்கள்" என்று சொல்லிக்கொண்டிருந்த நாவானது எழாமல் வலித்துக் கொள்ளக் கையால் சாடைகாட்டிப் பேசி வாயில் விடப்படுங்கஞ்சி உள் செல்லாமல் வெளியே யொழுகப் பிராணவாயுவும் பூதமும் நான்கு சுவாசமும் அடங்கி மனந்தடுமாற லுறுங் காலத்தில்.

மூன்றாம் பிறைச்சந்திரனைப் போன்ற பற்களும், மயிரும், சடையும், சிறுகுடியும், தடித்த உள்ளமும், கரிய உருவமும் விளங்கப் பெரிய மலைபோல யமதூதர்கள் நெருங்கிச் சூழ.

பாச வலையால் வீசி உயிரைப் பிடித்துக் கொண்டு போகப் பிள்ளைகள் வந்து குனிந்து புலம்பவும், வருந்தி மடியில் விழுந்து நாயகி யழவும் "அந்தோ இவர் இறந்தனரே" என்று காலவகையைக் குறித்து,

"பழைய மனித ரல்லவோ " என்று சொல்லிக்கொள்ளும் அயலார்கள் வேகமாக வந்து அங்குள்ளவர்களை நோக்கி "எல்லோருஞ் சென்று பந்தரிடுங்கள்" என்று சொல்ல, பறையர்கள் பறை முழக்கத் தொடங்கப் "பிணத்தைச் சுட விசாரியுங்கள்" என்று கூறி,

பல பேர்களைப் பணித்தனுப்பிவைத்து, பெரியவர்கள், "பூமியில் கிடக்கும் பிணத்தைச் சிலர் கழுவுங்கள்" என்று கட்டளையிட்டு, ஆபரணம் வத்திரம், பூமாலை வாசனை இவைகளைத் தரித்துத் தங்களன்பை வெளிப்படுத்தி நாற்றம் வீசும் தேகத்தை,

"முறை பிறழாமல் தூக்குங்கள்" என்று சொல்ல, இளம்பிள்ளைகள் ஓடி வந்து குனிந்தெடுத்துத் தோளில் வைத்துச் சுமந்து விரைந்து நடந்து சுடுகாட்டை யடைந்து "இவ்வளவுதானா மனிதவாழ்வு, இவ்வளவுதானா மனிதவாழ்வு" என மயான வைராக்கியம் பேசி வருந்தி,

விறகுகளைப் பரப்ப (அதிற் பிணத்தைக் கிடத்தி) மறைத்து நெருப்பிட்டு மூட்ட உடல் வெந்து தசை விழுந்து முரிந்து கொழுப்புகளுருகி, எலும்புகள் கரியாகி, தீயடங்கிய பின்னர் ஒருபிடி சாம்பரு மில்லாத தேகத்தைப் பொருளாக நம்பும் அடியேனை யினி யாண்டருளும் (பெருமானே).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

யோகா என அன்பாக அழைக்கப்படும் யோகேஸ்வரி 11. 03. 1951ல் யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர் 1970 தில் திருமணப் பந்தத்தில் பெரியோர் நிச்சயித்து ஒப்பந்தம் செய்யப்பட்டாலும் பல இடைஞ்சலுக்கு மத்தியிலும் கணவராக உள்ள வேலாயுதம் துணிவுடன் நின்று திறமையாய் திருமணத்தை நிறைவுற செய்த பின் மூத்த கைக்குழந்தை நந்தினியுடன் அவர் பணிபுரியும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் குடியேறி வாழ்ந்தனர்.

தன் கணவரின் வருமானத்துடன் சில சுய முயற்சியினாலும் தன் குடும்ப வாழ்வை வளமாக்கி மேலும் மூன்று பிள்ளைகளைப் பெற்று அவர்களின் உடல் உள வளர்ச்சி பெற ஆவன செய்து வந்தார். நாட்டுச் சூழ்நிலை காரணமாக கணவரை வெளிநாடு அனுப்பி கொலண்டில் கணவன் நிலை கொண்டு பின்னர் மனைவி பிள்ளைகளை அங்கு அழைத்து தகுந்த நிலை பெற்ற பின் கொலண்டில் பதினைந்து ஆண்டுகள் வாழ்ந்தார். மரபுபேணி மாண்புற வாழும் மூத்த மகள் நந்தினியை பிரான்ஸ் வாழ் கொழும்புத்துறை M. A. S. நாதன் அவருக்கும், எம் குடும்ப உறவுகளை என்றும் வரவேற்கும் அடுத்த மகள் ஆசிரியை சுகந்தினியை லண்டன் வசந்தனுக்கும், கஞ்சியில் பருப்பாம் குடும்பத்தின் ஆண் குல விளக்கான மகிந்தன் என்ற சக்கரவாகன தொழில் வல்லுருனரை சுழிபுரம் உள்ளூர் வர்த்தகர் அ. சின்னராசாவின் மகள் ஜெயமனோகரியுடனும், கடைக்குட்டி என்றாலும் பலரின் கவனத்துக்குரிய சட்ட வல்லுரனாகிய மகள் வசந்தினியை அவுஸ்திரேலியா வாழ் பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தசாமி தம்பதிகிளின் மூத்த புதல்வன் இரசாயன எந்திரவியலாளர் முகுந்தனுக்கும் திருமணம் செய்து வைத்தனர்.

2004ம் ஆண்டில் லண்டனுக்கு குடி பெயர்ந்த இவர் 3.10.12 வரை வாழ்ந்து சிவபதம் அடைந்தார்.

*அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவர் புலம்பல்

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் சொல்லும்
விதை ஒன்று வீழ்ந்திடில் செடி வந்து சேரும்
எனக்கு மனைவியாய் என் அன்னையாய்
ஆதரித்து ஆலோசனை வழங்கி உதவியவளே
வளமான என் வாழ்விற்கு வழிவகுத்த உமக்கு,
உமது ஆத்மா சாந்திக்கான என் பிராத்தனைகள் உரித்தாகுக.

**வேலாயுதம்**

## மகள் புலம்பல்

என் அன்புத்தெய்வமே அம்மா
கண்ணை இமை காப்பது போல்
எங்களைக் காத்து
அறுசுவை கூட்டி
தாலாட்டி சீராட்டி
எங்களுக்காய எல்லாம் தந்து
நல்லியல்புடன் எமை வளர்த்த
என் இனிய அம்மாவை
எப்போது நான் காண்பேன்

என் இதய தெய்வமே அம்மா
இன்று வானுறையும் தெய்வம் ஆகிவிட்டீர்கள்
மண்ணில் நல்ல வண்ணம்
வாழ வழிஅமைத்துத் தந்த அம்மா
உங்களை எங்களுக்கு
அன்னையாகத் தந்த
அந்தப் பெருமாளுக்கு நன்றி
கூறுகிறேன் அம்மா.

அம்மா தினம் தினம்
உங்கள் புன்னகை பூக்கும்
பூமுகத்தில் முழிப்பேன்
நினைவில் எப்பொழுதும் நீங்களே இருக்கின்றீர்கள்
அனைவரும் வந்து
ஆறுதல் சொல்லியும்
இழந்த இழப்புக்கு
ஈடுதான் உண்டோ அம்மா.
என்றும் உங்கள் நினைவுடன்

**அன்பு மகள்**
**சுகந்தினி மகாமேனன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் புலம்பல்

வெண்பா

ஐயிரண்டு திங்களா வங்கமெலா நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பே விளி.

இறுதிநாளென்று அம்மா, அம்மா
என்று நாம் கதறி அழ காலன் முந்தி
விட்டான் நாங்கள் பிந்தி விட்டோம்

என் அம்மா!
தொட்டிலில் என்னை அன்று தாலாட்டினாள் - பின்
கட்டிலில் என்னையிட்டு சீராட்டினாள்.
தட்டினில் உணவிட்டு சோறூட்டினாள் - புது
மொட்டினைப் போல்எனை அழகூட்டினைள்.

கதைகள் பல கூறி அறிவுக்கு விருந்தூட்டினாள்.
கலையாத நேசத்தை அவள் காட்டினாள்.
நற்சேயாய் என்னை அவள் உருவாக்கினார்.
உண்மை வழிநடக்க அவளே வழிகாட்டினைாள்.

பெற்றெடுத்துப் பேணிப் பேரிட்டு எத்தனையோ
கற்பனைகள்செய்து என்னைக் கவிபாடித் தாலாட்டி
மெத்தையில் வைத்தமுதமுலை தந்து வளர்த்தவளே
முத்தங்கள் தந்தெனது முகம் சிவக்கச் செய்தவளே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எமது பிரார்த்தனை உரித்தாகுக
**நந்தினி, சுகந்தினி, மகிந்தன், வசந்தினி**

**Dear mother,** you are
A selfless compassionate being
A gentle soul in your own way
A heart that gave all
A wife of understanding
A mother too many more than four
A hoarder for the grandchildren
A grandmother to the one in waiting
You waited in your nest to fly, Fly you did into our hearts,
You will remain with us...

Dear all,
Our dear mother's temple was her family. Her teaching and guidance have kept us strong and with unity through this adversity. Our dear mother remains with us to show our paths. Her presence is felt by all providing inner comfort.

We thank you for your support
God Bless
Vasanthini & Mugunthan (Youngest daughter & Son in Law)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள்

## *அம்மா எங்கு சென்றீர்கள்*

அன்பின் திருவுருவமாய் பண்பின் உறைவிடமாய் கடமைமிகு தாயாய் இருந்து நேர்மையாக வாழ்ந்து தம் மக்கள் அனைவரையும் தரணியிலே தலை நிமிரச் செய்து வெற்றிகள் பல பெற வித்திட்ட தன் நிகரில்லாஅன்புத்தாயே!

ஒரு நொடியில் அப்பாவையும், எங்களையும் தவிதவிக்க விட்டுவிட்டு எங்கு சென்றீரோ. அம்மா உங்கள் பிரிவு ஒரு புறம் அப்பா ஊண் இன்றி, உறக்கம் இன்றி தவிப்பதை எங்களால் தாங்க முடிய வில்லையே இனிமேல் எப்பொழுது உங்கள் அழகு முகத்தைப் பார்ப்போம். உங்கள் இனிய குரலைக் கேட்போம். உங்கள் இரு கண்களாக எங்களைக் காத்து வந்தீர்களே உங்கள் பிரிவை தாங்க முடியவில்லையே. எங்களுக்கு யார் ஆறுதல் கூறுவார்கள் என்றும் எங்களுடன் நிழலாக தொடர்ந்து வந்தீர்களே உங்கள் பிரிவை சிறிதேனும் எதிர்பாரா எங்களால் எப்படி தாங்க முடியும். நெஞ்சம் எரிகிறது. கண்களில் கண்ணீர் ஆறாகப் பாய்கிறது. உங்கள் பிரிவை எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம்மால் தாங்க முடியாது. எங்கள் உடலில் உயிர் உள்ள வரை எங்கள் கண்கள் உங்களைத் தேடும் உள்ளம் துயரத்தில் மூழ்கும் அம்மா நீங்கள் என்றென்றாலும் எங்கள் இதயக் கோயிலில் குடியிருப்பீர்கள்.

**அம்மா! அம்மா! என்று இனி நாங்கள் யாரை அழைப்போம்உங்கள்**

பிரிவால் வாடும்
மருமகன் நாதன்
மகள் நந்தினி
சுவேதா (France)
நிவேதா (France)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரங்கள் புலம்பல்

குன்றாப் பெருமையுடன் குவலயத்தில் வந்தவளே, ஒன்பது சகோதரங்களில் பெண்களில் மூத்தவளாய் எமக்கெலாம் ஆசாரப்பண்புடன், பாசமுடனும் பாதை காட்டிய சகோதரியே உமையிழந்து தவிக்கின்றோம். உளம் அழுது நிற்கின்றோம். நினையாத போதினிலே நின்சாவு வந்தபோது மனம் ஒடிந்து போனோம் நாம். மங்காத புகளோடு மண் உலகை விட்டகன்றீர். அன்பால் உம் நினைவாய்.

சகோதர, சகோதரிகள்

## மைத்துனி புலம்பல்

எங்களிற்கு அறிவிலும், அன்பிலும் மூத்தவராய் விளங்கினர். அவருடைய வார்த்தைகள் ஒவ்வொன்றும் எங்களுக்கு அறிவானதாகவும், சிந்திக்க கூடியதாகவும் இருக்கும். தெரியாத பல விடயங்கள் அவரிடம் இருந்து அறியக்கூடியதாக உள்ளது. நாங்கள் ஒரு சிறந்த மைத்துனியை இழந்து நிற்கின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சகலனும், மைத்தனியும்

திருமதி. சத்தியபாமா குடும்பம் (காரைநகர்)

## மருமக்கள் புலம்பல்

சிறப்பான ஒருவர் இல்லாக் குறைதனை போக்கி அன்பால் எமை ஆளாக்கி வைத்தீர். இன்பமுடன் எமக்கு அறிவூட்டி இனிய பல பணி செய்த எம் அன்பு மாமி உம்முடைய காலடியின் ஓசை வீட்டில் ஒலிப்பது போல எமக்கு தெரியுதம்மா. எமை எல்லாம் கதறி அள, தவிக்கவிட்டு ஏன் பிரிந்து சென்று விட்டீர்கள், அம்மா!

சண்முகநாதன், மகாமேனன் வசந்தன்,

முகுந்தன் (அவுஸ்திரேலியா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

உதட்டில் புன்சிரிப்பும்
உள்ளத்தில் அன்பும்
உற்சாக நடையும் கொண்ட அம்மம்மா
உங்கள் பேரப்பிள்ளைகளை
தோள் மீதும் மடிமீதும் போட்டு
தாலாட்டி சீராட்டி வளர்த்தீரே
எங்களையெல்லாம் தவிக்க விட்டு
எங்கே சென்றீர் அம்மம்மா!

பேரப்பிள்ளைகள் நாம் உங்களருகில் இல்லை என்பதனால் மரணம் உங்களை அணுகியதோ அம்மம்மா இல்லறத்தில் நல்லறமாய் வாழ்ந்த ஒளி விளக்கே அம்மம்மா காலமெல்லாம் உங்களுடன் வாழவேண்டுமென்று நாமிருக்க எங்களையெல்லாம் தவிக்க விட்டு எங்கே சென்றீர்கள் அம்மம்மா!

உங்கள் பிரிவு எங்களை தினம் தினம் வாட்டுகிறது - எங்கள் உயிருள்ளவரை உங்களை மறவோம் - அம்மம்மா எங்களுக்கு அறிவுரை சொல்லி எங்களுடன் ஆடிப்பாடி மகிழ்ந்ததை எங்களது நினைவுகளில் நாம் எப்போதும் மறக்க மாட்டோம்

பேரர் நாம் பெருமை பெற்று வாழ நல்ல பெட்டகமாய் இருந்து உதவி செய்தீரே பெரு வாழ்வு நெறி நாங்கள் வாழ செய்த பணி அத்தனையும் சிந்தித்தால் கண்களிலே நீர் அருவி வழிந்து ஓடும். பட்சமுள்ள அம்மம்மாவே எப்போது நீ வருவாய் எம் அம்மாவிற்கு அடுத்த ஸ்தானத்தில் என் அம்மம்மா உடல் வளர்ச்சியிலும் உள வளர்ச்சியிலும் மேலதிக கவனம் செலுத்தி வந்ததை நான் மறவேன்.

பிரியாமல் பிரிகிறேன்
அவரது ஆத்மா சாந்தியடைய என் பிரார்த்தனைகள்
பேர்த்திமார் சார்பில்
அக்ஷயா, மதுஷா, மிதுஷா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Vous étiez une grand-mère attentionnée;**
**Vous nous faisiez rire**
**Nous avons passe de bons moments avec vous.**
**En bref, vous étiez formidable**
**Mais malheureusement, vous êtes partie trop vite…**
**Tout cela va nous manquer Ammamma !**
**Nous t'aimons.**

***You were an attentive grandmother; You did us to laugh. We passed good moments with yourself. In brief, you were tremendous. But unfortunately, you left too quickly.... All that will lack us Ammamma! We like you***

**Suvetha, Nivetha.**

## பேரன் புலம்பல்

அம்மம்மாவின் பேரப்பிள்ளகைள் அறுவரில் நான் ஒருவரே ஆண்மகன் என்பதால் அம்மம்மா என்னில் விசேட கவனம் செலுத்தனார். ஆனால் மற்றப் பேரப்பிள்ளைகளுக்கு வஞ்சகம் செய்வதில்லை. என்னை என்றும் என் சொந்த அம்மா போல் பேணிப் பராமரித்ததை நான் என்றும் மறவேன்!

**பேரன் ஆரூரன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பண்பின் சிகரமாக பாசத்தின் உறைவிடமாய் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய் திகழ்ந்து எம்மை விட்டு பிரிந்து இறைபதம் எய்திய எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு திருமதி. வேலாயுதம் யோகேஸ்வரியின் மறைவின் போது நேரில் வந்தும், உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலைத்தொடர்புகள் மூலம் அனுதாபம் தெரிவித்து எமது துயரில் பங்குபற்றி பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார் உறவினர் நண்பர்கள் மற்றும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நடந்தேறிய அந்தியெட்டிக் கிரியைகளை அடுத்து ஞாயிற்றுக்கிழமை 4.11.2012 லூசியம் சிவன் கோவில் நாவலர் மண்டபத்தில் 4A Clarendon Rise London SE13 5ES இல் இடம் பெற்ற மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.


குடும்பத்தினர்

கணவன் K.S. வேலாயுதம் (லண்டன்)
பிள்ளைகள்- நந்தினி (பிரான்ஸ்), சுகந்தினி(லண்டன்)
மகிந்தன் (லண்டன்) வசந்தினி (அவுஸ்திரேலியா)
சகோதரங்கள் - சிவரெட்ணம்(லண்டன்) சுந்தரேஸ்வரி (கனடா), ஜெயரெட்ணம் (கனடா), ஜெகதீஸ்வரி(இலண்டன்), யோகரெட்ணம் (அமெரிக்கா), துரைரெட்ணம் (கனடா), பஞ்சரெட்ணம்(லண்டன்), இராஜேஸ்வரி (ஜேர்மனி)
சகலன் - நமசிவாயம்
மைத்துனி - சத்தியபாமா குடும்பம் (காரைநகர்)
மருமகன்கள் -சண்முகநாதன் (நாதன்,பிரான்ஸ்),மகாமேனன் (லண்டன்), Vasanthan AJ Food), முகுந்தன்(அவுஸ்திரேலியா)
மருமகள் - ஜெயமனோகரி (ரஜனி லண்டன்)
பேரப்பிள்ளைகள்- சுவேதா, நிவேதா (பிரான்ஸ்), அக்ஷயா, ஆரூரன் (லண்டன்), மதுஷா, மிதுஷா (லண்டன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NET PRINTERS - 020 826 5 0219